**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை - 2022**

--------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விாவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில்

திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம் பொருள் கிடைக்கப் பெற்றமைக்கு உரிய பொருள் பதிவேடு அல்லது இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டமைக்கான சான்றிதழ் பெறப்படாமல் மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,801,296 தொகையான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | தற்போது முறையான மாதிரி படிவம் (GRN) ஊடாக பொருள் கிடைக்கப் பெற்றமைக்கும் மற்றும் இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டமைக்கும் களஞ்சிய பொறுப்பாளர் உறுதிப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 257 இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்ததுடன், உறுதிச் சீட்டுக்களை உறுதிப்படுத்தும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் உரிய பிரகாரம் உறுதிப்படுத்தப்படுகின்றமையை கண்காணித்து உறுதிச் சீட்டுக்களை அங்கீகரித்தல் பணம் செலுத்துகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் உரிய பணியாக இருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 28,873,570 ஆன உறுதிப்படுத்தப்படாத உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த கிரயம் | எதிர்காலத்தில் முறையான சொத்துப் பதிவேட்டை பேணிச்செல்லல் தொடர்பாக விடயப்பொறுப்பு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 191,539,373 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 38 மற்றும் 38A பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் கடந்த ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுக்காக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பீட்டு ரீதியான நிதி நிலைமை கூற்று சமப்படாமல் காணப்பட்டதுடன் ரூபா 56,000,000 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்குகளை தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறினால் ஏற்பட்டதுடன், எதிர்வரும் ஆண்டில் இருந்து நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஒப்பீட்டு ரீதியான நிதி நிலைமைக் கூற்றை சமப்படுத்தாமை தவறினால் ஏற்பட்டதாகும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 54 மற்றும் 57 ஆம் பந்திகளின் பிரகாரம் உரிமை மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 5,920,019 ஆன மூலதன மானிய மீதி நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இன் கீழ் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் அதிகார சபையின் மொத்த உரிமைகள் மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்களின் மீதி அதற்கு சமமான பெறுமதியால் | 2022 ஆம் ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று புதிய படிவத்தில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக இந்த குறைபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டின் இறுதி கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 106(d)(iii) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 645,817,300 தொகையான திறைசேரி வரி, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்குவதற்கு பதிலாக விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கியதன் காரணமாக மீளாய்வாண்டின் தேறிய வருமானம் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று புதிய படிவத்தில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக இந்த குறைபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டின் இறுதி கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 106 மற்றும் 108 ஆம் பந்திகளின் பிரகாரம் உரிமை மூலதனத்தின் கூறுகள் மாத்திரம் உள்ளடங்கும் வகையில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் முறையே ரூபா 4,697,073 மற்றும் ரூபா 2,638,603 ஆன பின் ஊழியர் நலன்கள் மற்றும் பிற்போட்ட வரி பொறுப்புக்களின் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் மீளாய்வாண்டின் இறுதியிலான மொத்த உரிமைகள் ரூபா 7,335,676 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று புதிய படிவத்தில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக இந்த குறைபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டின் இறுதி கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 112 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் அடிப்படை மற்றும் குறித்துரைத்த கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான | இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் முறையாக குறிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களை குறிப்பிடுவதன் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் இருந்து இழப்பீட்டு நட்டங்கள் குறைக்கப்பட்டிருந்தமை, அறிக்கையிடல் திகதியில் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு, பயன்தரு ஆயுட் காலம் மற்றும் இழிவுப் பெறுமதி என்பன மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் அழைப்பு வைப்புக்களில் உள்ளடக்கப்பட்டமை, வங்கி மேலதிகப் பற்று அதிகார சபையின் நிதி முகாமைத்துவத்தின் அத்தியாவசிய பிரிவாக இருந்தமை, அதிகார சபையின் வருமான வரி 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்டமை மற்றும் செலுத்தப்பட்ட திறைசேரி வரி நிதி செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தமை போன்ற மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் இணங்கஞ் செய்யாத பிழையான பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்ட திகதியில் இருந்து 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலத்தில் காலாவதியாகின்ற முதலீடுகள் மாத்திரம் காசுக்கு சமமானவைகளின் கீழ் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் அதற்கு மேற்பட்ட காலாவதியாகும் | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்துடன், கூட்டு மொத்தமாக ரூபா 2,414,857,497 ஆன திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகள் என 05 முதலீடுகள் காசுக்கு சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 18(b) மற்றும் 20 ஆம் பந்திகளின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்காமையின் காரணமாக தொழிற்படு மூலதனம் மாற்றமடைவதற்கு முன் செயற்பாட்டு இலாபம் ரூபா 643,640,666 குறைவாகவும், தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றங்கள் மற்றும் செயற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் முறையே ரூபா 245,817,300 மற்றும் ரூபா 397,823,366 தொகைகள் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 397,823,366 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42(a) ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீண்டும் காண்பிப்பதன் மூலம் (Restate) சரிசெய்ய வேண்டியிருந்த ரூபா 1,781,077 தொகையான முன்னைய ஆண்டுகளின் பிழைகள் மற்றும் 42(b) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகள் கணக்குகளின் ஆரம்ப மீதியில் மீண்டும் காண்பிப்பதன் மூலம் சரிசெய்ய வேண்டிய ரூபா 1,154,844 ஆன முன்னைய | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளின் பிழைகள் என்பன நேரடியாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 49(a) மற்றும் 49(b) ஆம் பந்திகளின் பிரகாரம், சரிசெய்யப்பட்ட முன்னைய ஆண்டுகளின் பிழைகளின் தன்மை மற்றும் உரிய வரிசை விடயங்களின் சரிசெய்யப்பட்ட பெறுமதி என்பன வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 209,335,287 ஆன முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்கள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 4,498,490,257 தொகையான திரண்ட நிதிய மீதியின் சரியான தன்மை போதியளவான பிரகாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் 9(c) பந்தியின் பிரகாரம், அறிக்கையிடல் காலம் முடிவடைவதற்கு முன்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் கிரயம் அறிக்கை காலத்தின் பின்னர் தீர்மானிக்கும் போது நிதிக் கூற்றுக்களில் சீராக்க வேண்டியிருந்த போதும், 2023 பெப்ரவரி 06 ஆம் திகதி ரூபா 17,750,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட அவ்வாறான 03 வாகனங்களின் கிரயம் மீளாய்வாண்டின் நிதிக் | அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட 03 வாகனங்களின் பெறுமதி அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்தால் 2023.02.06 ஆம் திகதி மதிப்பீடு செய்து வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் சீராக்கப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்களின் மீதி அதற்கு சமமான பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 80(b) பந்தியின் பிரகாரம் முன்னை ஆண்டுகளின் வருமான வரிக்காக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட சகல சீராக்கங்களும் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினத்தில் சீராக்கப்படல் வேண்டும். எனினும், கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட ரூபா 124,779,724 ஆன வருமான வரி மிகை மதிப்பீடு செய்யப்பட்டமை சரிசெய்வதற்காக ரூபா 201,933,336 பிழையான பெறுமதியொன்று திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 124,779,724 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்நததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியம் ரூபா 77,153,612 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகார சபையில் 2016 ஆம் ஆண்டு முதல் வருமான வரி மீண்டும் கணிப்பிடப்பட்டு 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளதுடன், அந்த கணிப்பீடுகளின் போது இவ்வாறு வருமான வரி செலவினம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான உரிய சரிசெய்தல்கள் எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு எதிர்பார்க்கப்படுகின்ற நிலைமை மதிப்பீடுகளின் வேறுபாடுகள் ஏற்படுமாயின் அந்த வேறுபாடுகள் இலங்கை கணக்கீட்டு | இந்த 297 சொத்து விடயங்கள் தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்கள் எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நியமம் 8 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூச்சியமான கிரயம் ரூபா 33,242,530 ஆன 297 சொத்து விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதுடன், இந்த நியமத்தின் 76 ஆம் பந்தியின் பிரகாரம் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியில் உள்ளவாறும், இறுதியில் உள்ளவாறும் செலுத்த வேண்டிய சரியான வருமான வரி பெறுமதி முறையே ரூபா 27,056,509 மற்றும் ரூபா 178,969,934 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் முறையே ரூபா 151,836,233 மற்றும் ரூபா 10,982,871 ஆக பிழையாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய சரியான வருமான வரி பொறுப்புக்கள் ரூபா 167,986,963 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் வரி வருமானத்தை கணிப்பிடும் போது திறைசேரி வரி ரூபா 645,817,300 தொகை, ஏனைய வரி ரூபா 475,999 தொகை, பின் | அதிகார சபையின் 2016 ஆம் ஆண்டு முதல் வருமான வரி மீண்டும் கணிப்பிடப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளதுடன், அந்த கணிப்பீடுகளின் போது இவ்வாறு வருமான வரி செலவினம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டமை மற்றும் அது தொடர்பாக உரிய சரிசெய்தல்கள் எதிர்வரும் ஆண்டின் இறுதி கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | ஆண்டின் வருமான வரி செலவினம் மற்றும் ஆண்டின் இறுதியில் வருமான வரி பொறுப்புக்கள் சரியாக கணிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர் நலன் ஒதுக்கங்கள் ரூபா 1,862,372 மற்றும் சட்ட ரீதியான செலவினம் ரூபா 653,975 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 648,809,646 தொகை தகைமை பெறாத கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமான வரி ரூபா 90,833,350 இனால் குறைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 113,764,932 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக தேறிய வருமானம் மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் மீதி அதற்கு சமமான பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்ற வங்கியினால் வழங்கப்பட்ட கணக்கு கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானம் காண்பிக்கப்படாதிருந்த போதிலும், எதிர்வரும் ஆண்டின் போது அதற்கான வட்டி வருமானம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படையில் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு மற்றும் இறுதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணை முறிகளின் மொத்த பெறுமதி முறையே ரூபா 2,144,317,223 மற்றும் ரூபா 2,490,867,187 ஆக இருந்த போதிலும், அது ரூபா 2,141,652,055 தொகை மற்றும் ரூபா 2,414,857,497 ஆக பிழையாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முதலீடுகளின் பெறுமதி ரூபா 76,009,690 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் | 2023 ஆம் ஆண்டு வரையில் காலாவதியாகுவதற்கு இன்னும் 03 திறைசேரி உண்டியல்கள் மாத்திரமே இருந்ததுடன், அவை காலாவதியாகியதன் பின்னர் மீண்டும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், சகல காலாவதியான மற்றும் காலாவதியாவதற்கு நிர்ணயித்த திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகள் யாவும் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்படுகின்றமையால் இந்த பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டுள்ளது. | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தல், காலாவதியாகுதல் மற்றும் வருடாந்த வட்டி என்பவற்றை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்ட ரூபா 3,193,611,919 ஆன திறைசேரி உண்டியல்கள் காலாவதியாகியமை மற்றும் ரூபா 3,119,059,361 ஆன திறைசேரி உண்டியல்களை மீண்டும் முதலீடுகளின் 22 கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான சரியான திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 365,601,378 ஆக இருந்த போதிலும், அதிகார சபையினால் அது ரூபா 1,208,036.20 அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் தேறிய வருமானம் அதற்கு சமமான பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நேரடியாக வங்கிக்கு கிடைத்த ரூபா 25,420,629 தொகை உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இனங்காணப்படாத வைப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் தேறிய வருமானம் மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் மீதிகள் என்பன அதற்கு சமமான பெறுமதியால் குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த பெறுமதியை இனங்கண்டு வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படுவதுடன், இந்த பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட சகல வைப்புக்களும் நேரடியாக வங்கிக்கு அனுப்பப்பட்ட வைப்புக்கள் ஆனமையால் அதிகார சபைக்கு கிடைக்கின்ற பட்டியல்களில் பெறப்படாத பெறுமதியாக இருந்தமை மற்றும் அதனால் இந்த பெறுமதிகளை இனங்காணாத வைப்பாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன், குறித்துரைத்த இந்த பெறுமதிக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்க முடியாதுள்ளது. | கணக்காய்வுக்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு முன் நேரடி வைப்புக்களுக்குரிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அதிகார சபை அமைந்துள்ள அலுவலக கட்டிடம், தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு | 06 வாகனங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | அதிகார சபை பயன்படுத்துகின்ற போதும் உரித்து கையேற்கப்படாதுள்ள |

| | | |
|---|---|---|
| ஆய்வுகூட கட்டிடம் மற்றும் அதன் காணிகள் மற்றும் 06 வாகனங்கள் என்பன அதிகார சபைக்கு கையேற்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதிகார சபைக்கு கையேற்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், சுகாதார அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் மற்றும் அலுவலக கட்டிடத்தை அதிகார சபைக்கு கையளித்தல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். | சகல சொத்தக்களையும் கையேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| முற்பண பெறுவனவு | 72,972,666 | விரிவான பட்டோலைகள் மற்றும் பெறுவனவு விபரங்கள் | இது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டிருந்தது டன், அப்பெறுமதிக்காக பட்டோலை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் தற்போது அந்த பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. | இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்<br>--------------------------------- | | | |
| 39(1) மற்றும் 39(2) ஆம் பிரிவுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வருடாந்த விரிவான முகாமைத்துவ | கருத்து தெரிவிக்கப்படவில்லை . | தேசிய கணக்காய்வு அதிகார |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்வு அறிக்கை கிடைத்து 03 மாதங்களுக்குள் அந்த அறிக்கையை கவனத்தில் கொண்டு முன்மொழிவுகளில் மீள்செயற்பாட்டு நடவடிக்கைகள் அல்லது கவனத்தில் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும், திறைசேரி செயலாளருக்கும் மற்றும் உரிய அமைச்சுக்கும் அறிவிக்க வேண்டியிருந்ததுடன், சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஏதாவது செயல்நடவடிக்கைகள் அல்லது விடயங்கள் தொடர்பாக அமுல்படுத்துதல் அல்லது முடியாதிருக்குமாயின் அதற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------ | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 128(1)(உ) 507, 756, 757, 758, 770 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தி | கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒவ்வொரு நிதி ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மெய்மெய்யாய்வு சபை நியமிப்பதற்கும், அதன் அறிக்கை அடுத்து வரும் ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை | 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், அந்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் உரிய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிபதிக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு முதல் மொத்த கிரயம் ரூபா 191,539,373 ஆன நடைமுறையல்லா சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை சுற்றறிக்கையின் 9.1(ஆ) பந்தி. | பதவி நிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஆகக் கூடியது ரூபா 100,000 செயல் நிமித்த முற்பணம் வழங்க முடியுமாக இருந்த போதிலும், பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 90 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,862,050 செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், விநியோகிக்கப்பட்ட முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்யாமையின் காரணமாக 19 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட முற்பணம் காசாக 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகை மீண்டும் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கூட்டங்களுக்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு பணம் வழங்கப்பட்டதன் பின்னர் மிகுதி பணம் மீண்டும் தீர்க்கப்படும் வரை வைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 14 ஊழியர் வகைப்படுத்தலின் 14.2 ஆம் பிரிவின் பிரகாரம் மூன்றாம் நிலையில் உத்தியோகத்தர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமையால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 90 சந்தர்ப்பங்களில் அதிகார சபையில் மூன்றாம் நிலையில் உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர். | -மேற்படி- |
| (இ) | திறைசேரி சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத் துறை | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் தமது நிறுவனங்களின் கீழ் வருகின்ற நிறுவனத்தின் | இந்த நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவதற்காக அதிகார சபையால் | சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய உத்தியோகத்தரின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்தவ சுற்றறிக்கை | கீழ் வருகின்ற சரியான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், அந்த நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவதற்காக ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பொருத்தமான உத்தியோகத்தர் பெயரிட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். | தகவல்கள் உரித்துரைத்த படிவத்தின் பிரகாரம் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரம் இன்றி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினதும், சுகாதார அமைச்சின் இணைந்த பதவி அணியினர்களுக்காகவும் 2022 மே முதல் 2023 ஏப்ரல் வரை விஷேட படியாக ரூபா 26,498,645 தொகையும், வருகை படியாக ரூபா 8,327,000 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 34,825,645 செலுத்தப்பட்டிருந்தது. | இலக்கம் 05 என்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 16(2)(1)(ஆ) மற்றும் (ஈ) இன் பிரகாரம் சேவையில் உள்ளவர்களுக்காக செலுத்த வேண்டிய ஊதியங்களை நிர்ணயிப்பதற்கும், பதவியணியினர் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு உத்தேச முறையொன்றை தாபித்து பங்களிப்பு வழங்க வேண்டிய இருந்ததுடன், உத்தியோகத்தரின் திருப்தியை ஏற்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அதிகார சபையில் தரித்து வைத்துக்கொள்வதற்காக விஷேட படியொன்றை வழங்குவதற்கும் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | உரிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,294,424,519 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 567,192,769 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 727,231,750 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகார சபையின் மொத்த வருமானம் ரூபா 1,029,745,170 இனால் உயர்வடைந்து சென்றமையும், உள்நாட்டு பிரயாணச் செலவினம், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கட்டிட பராமரிப்பு செலவினம் மற்றும் ஏனைய படிகள் ரூபா 66,367,458 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 14 (ஐ) உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையினால் அனுமதிப் பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் ஒன்றிணைந்த உற்பத்திகள் அல்லது பகுப்பாய்வு செய்யக் கூடிய மருந்து உற்பத்திகளின் அளவு தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்காலிகமான தீர்வொன்றாக 2022.03.01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், உற்பத்திகளின் அளவு தொடர்பான விபரங்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு அறிவிக்குமாறு 2022.02.23 ஆம் திகதி அறிவித்தலொன்று ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த தரவுகளை ஒழுங்கு முறையாக சேகரித்தல் மற்றும் பேணிச்செல்வதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் Market Surveillance (சந்தை அவதானிப்புக்கள்) இற்காக பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டி இருந்ததுடன், உலக சுகாதார அமைப்பினால் benchmark (அளவிடை புள்ளிகள்) செயற்பாடு ஊடாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை மற்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் இதற்கு சில வருடங்களுக்கு முன்னர் மேற்கூறப்பட்ட பிரகாரம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், இது வரை முறையான விரிவுபடுத்தல் வேலைத் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திட்டங்கள் அதற்குரிய ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் அமுல்படுத்துவதில் வசதியீனங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தது. | |
| (ஆ) | சட்டத்தின் 41(2), 66(2) மற்றும் 87(2)உப பிரிவுகளின் பிரகாரம் மருத்துவ விஞ்ஞானம், மருந்து மருத்துவ விஞ்ஞானம் மற்றும் மருந்தியல் அல்லது ஏனைய உரிய விடயங்கள் தொடர்பான பட்டமொன்றுடன் உத்தியோகத்தர் ஒருவர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் (Medicine Regulatory) பிரிவில் மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்துதல் (Medicine Devices Regulatory) பிரிவு மற்றும் எல்லைப்படுத்தப்பட்ட உற்பத்தி ஒழுங்குபடுத்தல் (Border Line Production Regulatory) பிரிவு என்பவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதவிகள் அதிகார சபையின் சேவை தேவையின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த திருத்தங்களையும் கவனத்தில் கொண்டு மேற்கூறப்பட்ட குறித்த பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் தற்போது வரையில் சேவையில் ஈடுபடுகின்ற மருந்தியலாளர்களின் தகைமையின் அடிப்படையில் உள்ளீர்ப்பு செய்தல் பூர்த்தி அடைந்தவுடன், உடனடியான அதிகார சபையின் நிரந்தர பதவியணியினருக்கு சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு இடையே தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான பிரிவுகளின் தலைவராக எதிர்காலத்தில் நியமிப்பதற்கு முடியும் என எதிர்பார்க்கின்றோம். | -மேற்படி- |
| (இ) | சட்டத்தின் 43(2)(அ) மற்றும் (ஆ) மற்றும் 68(2)(அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளின் பிரகாரம் மருந்துகள் மதிப்பீட்டு குழு மற்றும் மருத்துவ உபகரணங்கள் மதிப்பீட்டு குழுவில் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் நலன்கள் ஆபத்துக்கள், உறுதித்தன்மை, தரம் பாதுகாப்பு தன்மை, தேவை, விலை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின் போது அந்த மருந்துகளின் பொருளாதார பகுப்பாய்வு குறித்துரைத்த ரீதியில் | மாதாந்தம் நடைபெறுகின்ற மருந்துகள் மதிப்பீட்டு குழு (MEC) இற்கு சகல மருந்து விண்ணப்பங்களையும் மதிப்பீடு செய்து பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த குழுவின் அறிக்கை அதிகார சபைக்கு வழங்கப்படுவதுடன், அதற்கான குழு பரிந்துரை (Board Memo) மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவிற்கு வழங்கப்படுவதுடன் அதன் போது அதிகார சபைக்கு ஏதாவது மருந்தொன்றின் மதிப்பீட்டு செயல் நடைமுறைகள் தொடர்பாக | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காண்பித்து தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்று அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவாக கண்டறிவதற்கு தேவை ஏற்படுமாயின் அதற்காக உரிய ஆவணங்கள் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவிடம் உள்ளது. | |
| (ஈ) | சட்டத்தின் 58, 59, 82, 83 மற்றும் 109 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஏதாவது மருந்தொன்று அல்லது மருத்துவ உபரணமொன்று அதிகார சபியல் பதிவு செய்யப்படாமல் மற்றும் அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி செய்யமுடியாதிருந்ததுடன், உயிர்களை காப்பாற்றுவதற்கு, பரவும் நோய்கள் அல்லது தொற்று நோய்கள் பரவுதை தடுத்தல் மற்றும் தேசிய தேவை மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற விஷேட சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் பதவிலிருந்து விடுவிக்கும் கடிதம் விநியோகிப்பதற்கு அதிகார சபைக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், ஏனைய காரணங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது அரச மருந்தக கூட்டுத்தபானம் மற்றும் மருந்துவ வழங்கல் பிரிவிற்காக மருந்துகள் பதவியில் இருந்து விடுவிக்கும் 286 கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. தனியார் கம்பனியொன்றுக்கு அவ்வாறு விநியோகிக்கப்பட்ட பதிவுசெய்தலில் இருந்து விடுவிக்கும் 38 சான்றிதழ்களை பரீட்சித்த போது அதிகார சபையினால் மருந்துகள் மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்தமையும், அதன் காரணமாக உரிய மருந்துகளின் தரம், பாதுகாப்பு தன்மை மற்றும் உறுதித்தன்மை தொடர்பாக அதிகார சபை பொறுப்பு இல்லாதிருந்தமையும், பொறுப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் கையேற்க வேண்டியிருந்தமையும் அந்த பொறுப்புக்கள் அதிகார | விஷேட சந்தர்ப்பமான விடயங்களின் போது சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் விடுவிப்பு கடிதங்கள் விநியோகிக்கப்படுவதுடன், வணிக ரீதியில் நலன்கள் குறைந்த மருந்துகள், மருந்து கம்பனியால் பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டாதிருந்த நிலைமையிலும், எனினும் அந்த மருந்துகள் அத்தியவசியமான சந்தர்ப்பங்களின் போதும் அந்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான திட்ட முறைமையை தயாரித்தல் தேவையான விடயமொன்றாக இருந்தமையால் அவ்வாறான மருந்து விண்ணப்பங்களுக்கும் இந்த விடுவிப்பு கடிதம் விநியோகத்தல் உள்ளடக்கப்பட்டமை மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினாலும் இவ்வாறான பதிவுகள் இன்றிய மருந்துகளுக்காக விடுவிக்கும் அங்கீகாரம் வழங்கும் போது மருந்துகளின் தரத்தன்மை, பாதுகாப்பு தன்மை உள்ளடக்கங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யாதிருந்தமையும் அதற்காக அதிகார சபை பொறுப்பினை கையேற்காது எனவும் குறிப்பிடுகின்றோம். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விஷேட சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தரத்தன்மை தொடர்பான சான்றிதழ் இன்றிய மருந்துகள் நாட்டிற்குள் உட்புகுவதை குறைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் கைவிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | | |
| (உ) | சட்டத்தின் 60(2), 61, 84(2), 85, 103(2) மற்றும் 104 ஆம் பிரிவுகள் மற்றும் உப பிரிவுகளின் பிரகாரம் அதிகார சபையினால் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட உற்பத்திகளை பதிவு செய்தலின் பதிவை நிராகரித்த சந்தர்ப்பத்திலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டியிருந்த போதிலும், அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதி முதல் இது வரை அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தினந்தோறும் மருத்துவ உபகரணங்களை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் நாளாந்தம் அல்லது மாதாந்தம் வர்த்தமானியை விநியோகித்தல் நடைமுறையில் வசதியீனமாக இருந்ததுடன், விண்ணப்பத்தில் இலக்கத்துடன் இணையதளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், குறித்துரைத்த கால எல்லையில் வர்த்தமானி பத்திரம் மூலம் பரிந்துரை செய்யப்படுகின்ற மற்றும் அல்லாத மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளப்படுகின்றது. பதிவு செய்யப்படுகின்ற தடைசெய்யப்பட்ட உற்பத்திகளின் பதிவு தொடர்பாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதில் நிராகரிக்கப்பட்டவைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான தேவை இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சட்டத்தின் 69(1)(ஆ)(v) உப பிரிவின் பிரகாரம் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபையின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயரிடப்பட்ட ஒருவர் மருத்துவ உபகரணங்களின் மதிப்பீட்டு | 2022 செப்டம்பர் 15 ஆம் திகதிய என்எம்ஆர்ஏ/எம்டீசீ/9/22 ஆம் இலக்க கடிதம் மூலம் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் தொடர்பாக அதிகார சபையினால் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுவிற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மருத்துவ உபகரணங்களை உள்ளடக்கிய கதிரியக்க உபகரணங்கள் மற்றும் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான அதிகாரம் உரித்தான இலங்கை அணுசக்தி வலுசக்தி ஒழுங்குபடுத்தல் அமைச்சினால் மருத்துவ உபகரணங்களின் மதிப்பீட்டு குழுவினை பிரதிநிதித்துப்படுத்தும் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கைவிடப்பட்ட போதிலும், இது வரையிலும் அதற்கான பதில் அளிக்கப்படாதிருந்ததுடன், மேலும் இது தொடர்பாக மீள் நினைவூட்டல் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு எதிர் காலத்தில் எதிர்பார்க்கின்றோம். | |
| (எ) | சட்டத்தின் 72(1) மற்றும் 93(1) உப பிரிவுகளின் பிரகாரம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட உற்பத்திகளை மதிப்பிடுவதற்காக அந்தந்த மதிப்பீட்டு குழுவிற்கு பொது வழிகாட்டி விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான வழிகாட்டி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 72(4) மற்றும் 93(4) உப பிரிவுகளின் பிரகாரம் உரிய மதிப்பீட்டை நடாத்துவதற்காக குறித்துரைத்த காலஎல்லையில் பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள் குறிப்பிட்டு சிறந்த உற்பத்தி துறை தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஏனைய அதற்குரிய வழிகாட்டிகளை அமுல்படுத்துவதற்காகவும் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உபகரணங்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டி மருத்துவ உபகரண மதிப்பீட்டு குழுவுடன் கலந்துரையாடி இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன், மேலும் சில கலந்துரையாடல்களின் பின்னர் வழிகாட்டியை தயாரிக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருப்பதுடன், இது வரை பொது வழிகாட்டி எதுவும் தடைசெய்யப்பட்ட ஒழுங்குபடுத்தல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த போதும், அவ்வப்போது அதிகார சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் தொடர்பாக தடைசெய்யப்பட்ட உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவிற்கு அறிவிக்கப்படுவதுடன், சிறந்த உற்பத்தி துறை தொடர்பாக அதிகார சபையினால் மருந்துகளுக்காக பின்பற்றப்படுகின்ற வழிகாட்டியும் தடைசெய்யப்பட்ட உற்பத்தி ஒழுங்குபடுத்தல் பிரிவிற்கும் உரித்தாகும் வகையில் அமுல்படுத்தப்படுகின்றது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | சட்டத்தின் 74(1) மற்றும் 95(1) உப பிரிவுகளின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட | மருத்துவ உபகரணங்களை மதிப்பிடுதலை செயற்திறனாக மேற்கொள்வதற்காக மாதத்திற்கு ஒரு கூட்டம் மற்றும் உப கூட்டங்கள் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தடைசெய்யப்பட்ட உற்பத்திகள் அமைச்சரினால் முன்னர் நிரற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூன்று அளவில் நடாத்தப்படுகின்றமையால் அந்த கூட்டத்தில் இருந்து வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் விண்ணப்பத்தின் இலக்கத்துடன், இணையதளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தினந்தோறும் மருத்துவ உபகணங்களை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையினால் நாளாந்தம் அல்லது மாதாந்தம் வர்த்தமானி விநியோகித்தல் நடைமுறையில் வசதியீனமான விடயமாக இருந்தமை மற்றும் குறித்துரைத்த கால எல்லையில் வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பரிந்துரை செய்யப்படுகின்ற மற்றும் அல்லாத மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2023 மே 22 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட உற்பத்திகளை மும்மொழிகளிளும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | சட்டத்தின் 83(4)(ஆ) மற்றும் 102(4)(ஆ) உப பிரிவுகளின் பிரகாரம் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் தடைசெய்யப்பட்ட உற்பத்திகளின் தரத்தை பரீட்சிப்பதற்காக தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல உபகரணங்களினதும் தரம் பரிசோதனை கூடத்தில் பரீட்சிக்க முடியாதிருந்ததுடன், சிகிச்சை பரிசோதனைகள், உபகரண ஆராய்ச்சி அறிக்கை மதிப்பீடு, ஆய்வுகூட ஆராய்ச்சி அறிக்கை மதிப்பீடு, இறுதி வாசகர்களுக்கு அதன் செயற்படு நிலை தொடர்பான காட்சிகள்/ சமர்ப்பிப்பித்தல் மூலம் பரிந்துரைகள் வழங்கப்படுவதுடன், சகல மருத்துவ உபகரணங்களையும் பதிவு செய்வதற்கு முன் மாதிரிகளை மதிப்பிடுதல் பிரயோக ரீதியில் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வசதியீனமான விடயமாக இருந்தமையால் தொழில்நுட்ப ரீதியிலும் தேவையான விடயங்களாக இருந்தமையாலும் ஒழுங்குபடுத்தல் (Regulatory Reliance) சார்புமுறைகளை பயன்படுத்தி மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை, தடைசெய்யப்பட்ட உற்பத்திகளின் தரத்தை பரீட்சிப்பதற்காக தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்தில் (NMQAL) இற்கு தெரிவு பரிசோதனைக்கு முன்னர் வழங்கப்படாதிருந்ததுடன், அதற்கு காரணமாக தடைசெய்யப்பட்ட உற்பத்திகளில் அநோகமான மருந்துகள் தொகுதிக்கு கொண்டுவருகின்ற விற்றமின் / தாதுக்கள் மற்றும் மருந்து தொகுதிக்கு கிடைக்காத மூல பொருட்கள் அடங்கியிருந்தமையால் அந்த உற்பத்திகளை பரீட்சிக்கும் இயலுமை காணப்படாதிருந்த தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சி கூடத்திற்கு அந்த உற்பத்திகளை பரீட்சிப்பதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | |
| (ஓ) | சட்டத்தின் 83 (6) மற்றும் 102(6) உப பிரிவுகளின் பிரகாரம் அமைச்சரால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உற்பத்தி மதிப்பீட்டு குழு மற்றும் தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடம் போன்ற நிறுவனங்களினால் பரீட்சித்தல் அல்லது மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள், அந்த செயற்பாடுகளின் கால எல்லை, கூட்டங்கள் நடாத்த வேண்டிய முறை, கூட்டங்களின் போது பின்பற்றப்பட்ட வேண்டிய பணி நடைமுறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | மருத்துவ உபகரணங்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டி மருத்துவ உபகரண மதிப்பீட்டு குழுவுடன் கலந்துரையாடி இறுதி கட்டத்தில் காணப்படுவதுடன், மேலும் கலந்துரையாடப்படும் சில சந்தர்ப்பங்களின் பின்னர் வழிகாட்டிகள் தயாரிக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியும் எனவும், தடைசெய்யப்பட்ட உற்பத்தி ஒழுங்கு விதிகளுக்கு உரிய விடயங்கள் மருந்து ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் திருத்த வேண்டி இருந்தமையும், அவ்வப் போது கலந்துரையாடலுக்கு | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளின் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் என்பன குறித்துரைத்த ரீதியில் காண்பித்து கட்டளை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டிருந்ததுடன், உற்பத்தி பிரிவினாலும் அதற்கான கருத்துக்கள் முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சட்டத்தை அமுல்படுத்தும் வரை இலங்கையில் தடைசெய்யப்பட்ட உற்பத்தி ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்த வேண்டிய தொகுதியொன்றாக இனங்கணானப்படாமல் இருந்தமையும், அதற்குரியதாக முன்னைய ஐயவினாக்களுக்காக எந்தவொரு சட்ட ரீதியான ஆவணங்கள், பிரமாணங்கள் வழிகாட்டி அல்லது சர்வதேச மட்டத்தில் இணங்குகின்ற மாதிரிகள் காணப்படாதிருந்தமையும், பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டிகள் தயாரிக்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமையின் பிரகாரம் உற்பத்திகளுக்காக சரியான கட்டளை தயாரித்தல் இது வரை நிர்மாணிக்கப்படவில்லை. | |
| (ஓ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்காக முறைப்பாட்டு குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்பாட்டு குழுவொன்றை ஸ்தாபிப்பதற்காக 2023 மார்ச் 17 ஆம் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதிகார சபையின் சட்டத்தை உரிய பிரிவுகளின் பிரகாரம் முறைப்பாட்டு குழுவொன்று அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றமையினால் முறைப்பாட்டு குழு நியமிக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுவதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் II பகுதியின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களும் தமது நிறுவனத்தால் பொது | 2022 மார்ச் 07 ஆம் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது சுற்றறிக்கையை மீறி கட்டண |

| | | | |
|---|---|---|---|
| | மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் மீளாய்வு செய்து மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை 15 சதவீத ஆகக் கூடியதன் கீழ் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போதும் ரூபா 306,176,273 கட்டண வருமானம் அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. மேலும், 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய 01/2020(ii) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கட்டணம் அதிகரித்தல் மேற்கொள்ளப்படாதிருந்த சகல நிறுவனங்களினாலும், தமது கட்டணம் 20 சதவீதத்தினால் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து 2023 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரச நிதி திணைக்களத்திற்கு அறிக்கையிட வேண்டியிருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையினால் இது வரையிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், சுற்றறிக்கையை மீறி கட்டணம் திருத்தப்படுவதை தடுப்பதற்கான முறையான அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | ''ரூபாவுக்கு ஒப்பீடாக தற்போது காணப்படுகின்ற டொலர் பெறுமதி, இது வரையில் அதிகார சபைக்கு சேவை கட்டண வருமானத்தை கவனத்தில் கொண்டு சேவைக் கட்டணத்தை திருத்துதல் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் நிர்வாக தரப்பினர் மூலம் தீர்மானம் எடுத்து எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல் பொருத்தமானது என'' திறைசேரி பிரதிநிதி ஒருவரினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் இது தொடர்பாக அறிவித்து பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பித்து அதில் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திருத்தங்களை தடுப்பதற்கோ முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (க) | 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் இலக்கம் 02, 03 மற்றும் 04 என்ற கட்டண கட்டளையின் பிரகாரம் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட உற்பத்திகளில் உற்பத்திகளில் தனியார் வழங்கல்ளுக்காக பதிவில் இருந்து விடுவிப்பு செய்வதற்கு கோரும் போது கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும், பதிவிலிருந்து விடுவிக்கும் | 2018 சனவரி 05 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரத்தை வெளியிடுவதற்கு முன்னிருந்து அதிகார சபைக்கு கிடைக்கின்ற பதிவிலிருந்து விடுவிப்புச் செய்யும் விண்ணப்பங்களுக்காக நீண்ட காலத்திற்கு முன்னர் காணப்பட்ட நிறுவனத்தில் பின்பற்றப்பட்ட முறைமை தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், நினைத்த மாத்திரத்தில் வர்த்தமானி பத்திரத்தை மீறுவதற்கு எடுக்கப்பட்ட | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கணிசமான வருமான இழப்பிற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 128(கி) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தை கையளிக்கும் போது கட்டணம் அறவிடலின் காரணமாக மீளாய்வாண்டின் போது நிராகரிக்கப்பட்டிருந்த தனியார் துறையின் மருத்துவ உபகரணங்களை பதிவிலிருந்து விடுவிக்கும் 123 விண்ணப்பங்களுக்காக அறவிட முடியுமாக இருந்த ரூபா 10,686,209 கட்டணம் அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 25 ஆம் திகதி இதனை சரிசெய்வதற்காக உள்ளக சுற்றறிக்கையொன்று விநியோகிக்கப்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு கட்டண கட்டளைக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கணிசமான வருமான இழப்புகளுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 128(கி) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முயற்சியாக இல்லாதிருந்தமையும், கணக்காய்வில் அது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்ட உடனடியாக அதன் கடினமான அறிவுறுத்தலாக கொண்டு 2023 சனவரி 25 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசாங்க துறையின் வழங்கல்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னரும் தனியார் துறையின் வழங்கல்களுக்காக கோரும் போதும் கட்டணம் அறவிடப்படுகின்றது. | |
| (கா) | தெரிவு பரிசோதனைக்காக இலக்கம் 2052/33 என்ற விஷேட வர்த்தமானி பத்திரத்தின் இலக்கம் 02, 03 மற்றும் 04 என்ற கட்டணங்கள், கட்டண கட்டளையில் vii ஆம் பட்டோலையின் பிரகாரம் கட்டணம் அறவிட வேண்டியிருந்ததுடன் அதன் பகுப்பாய்வு கட்டணத்தை விடுவித்தல் தெரிவு தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அதிகார சபையினால் அரசாங்கத்தின் வைத்தியசாலைகள், மருத்துவ வழங்கல் பிரிவு , நீதிமன்றம் போன்ற அரசாங்க நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தெரிவுகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பகுப்பாய்விற்காக கிடைத்த 378 தெரிவுகளில் 328 மற்றும் முன்னைய ஆண்டுகளின் | மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஸ்தாபிப்பதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற அவதானிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (Surveillance) கீழ் பரிசோதனைகூட உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் சுகாதார நிறுவனங்களுக்கு சென்று மாதிரிகளை பெற்றுக் கொண்டிருந்ததுடன், அந்த மாதிரிகளை பெறும் போது பணம் அறவிடப்படாதிருந்தமை மற்றும் வருகின்ற மாதிரிகளின் பரிசோதனைக் கூடங்களுக்கு கிடைத்தலை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த செயற்பாடுகள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னரும் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக பணம் செலுத்த வேண்டிய முறை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிருக்காமையால் | பகுப்பாய்வு கட்டணங்களில் இருந்து விடுவிக்கப்படுகின்ற தெரிவுகள் தொடர்பாக முறையான அங்கீகாரத்தை பெற்று கட்டண கட்டளை திருத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது கிடைத்த 477 தெரிவுகளில் 421 இற்காக பகுப்பாய்வு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது பொது சுகாதார பாதுகாப்பு சேவையாக பொதுமக்களின் நலன்களுக்காக முன்னர் மேற்கொள்ளப்பட்ட பிரகாரம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (கி) | தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆய்வுகூடம் (National Drugs Quality Assurance Laboratory) இனால் பரிசோதனைக் கூடத்தின் நியமங்கள் தொடர்பாக தர மதிப்பீடு தொடர்பான சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தர நிர்ணய சபைக்கு 2020 பெப்ரவரி 06 ஆம் திகதி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இது வரையிலும் அந்த நியம சான்றுதழை பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது. | மீளாய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு அனுப்பியதன் பின்னர் 2021 நவம்பர் 26 ஆம் திகதி நிகர மதிப்பீடு (virtual assessment) நடாத்தப்பட்டிருந்ததுடன், மேலும் சரிசெய்யப்பட வேண்டிய குறைபாடுகள் தொடர்பாக 2023 மார்ச் 20 ஆம் திகதி அறிவித்தல் வழங்கியிருந்ததுடன், கள மதிப்பீடு (On-site assessment) இற்காக 2023 யூலை 05 ஆம் திகதி ஈடுபடுத்தப்பட்டிருந்தமை இலங்கை தரப்படுத்தல் சபையினால் 2023 மே 03 ஆம் திகதி தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு தேவையான அடிப்படை தேவையினை வழங்குவதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்படல் வேண்டும். |
| (கீ) | 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மருந்துகளில் 378 தெரிவுகளில் 241 தெரிவுகள் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டிருந்தமையால் செயல்முன்னேற்றம் 64 சதவீதம் மாத்திரமாக இருந்தது. மேலும் சட்டத்தின் 39(4) ஆம் பிரிவு மற்றும் ஆராய்ச்சிக் கூடத்தின் செயற்பாட்டு நடைமுறைகள் (Standard Operating Procedure) பிரகாரம் 90 நாட்களுக்குள் பரிசோதனை அறிக்கை விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரை | 2015 ஆம் ஆண்டில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஸ்தாபிப்பதற்கு முன்னர் இருந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பதவியணியினரில் 1/3 இற்கு குறைந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தரப்பொன்று கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், பரசோதனைக் கூடத்தின் செயற்பாட்டு நடைமுறைகளின் (Standard Operating Procedure) பிரகாரம் 90 நாட்களுக்குள் உரிய மாதிரிகளின் பகுப்பாய்வை மேற்கொண்டு தர அறிக்கை விநியோகித்தல் முடியாத விடயமாக இருந்தமை மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் பரிசோதனைக் | பரிசோதனை கூடத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்து மாதிரிகளுக்கு உரிய தர அறிக்கை குறித்த காலத்தில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட 47 தெரிவுகளின் அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விநியோகிக்கப்படாதிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2023 மே 08 ஆம் திகதி வரையிலும் அதில் 37 தெரிவுகளின் அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடத்தின் செயற்பாடுகளுக்காக புதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இது வரை சேர்க்கப்படாதிருந்த போதும் இருக்கின்ற தொழில்நுட்ப பதவியணியினரின் கீழ் ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்பட்டிருந்தமையும் சில சந்தர்ப்பங்களில் தர அறிக்கை குறித்துரைத்த பிரகாரம் விநியோகிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது. | |
| (கு) | அதிகார சபையின் தரவு முறைமை தானியங்கி ஒப்பந்தம் ரூபா 29 மில்லியன் தொகையில் 05 வருட காலத்திற்காக தனியார் கம்பனியொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2021 மே மாதம் வரையில் ரூபா 12,253,328 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய தனியார் கம்பனியின் கவனம் இன்மை அல்லது வேண்டும் என்றே இந்த தரவு முறையில் உள்ளடக்கப்பட்டிருந்த சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடையும் வரை அந்த சேவை செயலிழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் 2022 யூலை 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மூலம் முறைமையில் அழிக்கப்பட்டிருந்த தரவுகளை மீண்டும் ஸ்தாபிக்க முடியாதிருந்ததாக அறிவித்திருந்ததுடன், இது வரையிலும் ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது உரிய கம்பனிக்கு எதிராக நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தரவு முறைக்குரிய தகவல்கள் அழிவடைந்திருந்ததாக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விடயங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அந்த வழக்கின் முறைப்பாட்டிற்காகவும் தகவல் தொழில்நுட்ப முகவருக்காக சட்டமா அதிபர் தோன்றியிருந்தமை மற்றும் இந்த வழக்கிக்குரிய விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றமையினாலும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை இனாலும் அந்த நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் நட்டத்தை அறவிடுவதற்கோ உரிய கம்பனிக்கு எதிராக நடவடிக்கையோ எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் தரவு முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யும் முறையில் இலகுவாக செயற்படக் கூடிய பொருத்தமான தகவல் முறையொன்றை விரைவாக ஸ்தாபித்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 80 சந்தர்ப்பங்களின் போது மீளச் செலுத்தப்பட்ட ரூபா 5,604,061 வருமானத்தில் ரூபா 3,021,246 முன்னைய ஆண்டுகளுக்குரிய வருமானமாக இருந்ததுடன், அந்த வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையினால் இது வரை ரூபா 460,573 மேலதிக வருமான வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மொத்த வருமானம் மீள செலுத்துதல்களில் 48 சதவீதம் அதாவது 2,701,407 அதிகார சபையினர் உத்தியோகத்தர்களின் கவனமின்மை மற்றும் தவறுகளின் காரணமாக மேலதிகமாக அறவிடப்பட்ட கட்டணம் ஆகும். | சேர்க்கப்பட்ட வருமானங்களை மீள செலுத்துதல் தொடர்பாக இது வரையில் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நடவடிக்கைகள் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | வருமானத்தை மீள செலுத்தும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருந்து தகவல்கள் மீளமைப்பு தரவு முறைமையை தயாரிக்கும் (Revamping the Medicine Database) ஒப்பந்தம் 2020 நவம்பர் 11 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்தல் தொடர்பான சான்றிதழ் பெறப்படாமல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4,774,752 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த முறைமை இது வரையிலும் பயனற்று காணப்பட்டது. | இந்த முறைமைக்காக கொடுப்பனவு செய்யும் போது வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்தல் தொடர்பான சான்றிதழ் (உரிய கோவையில் குறிப்புக்களை இடுவதன் மூலம்) பெறப்பட்டதன் பின்னர் இந்த கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமை மற்றும் இந்த தரவு முறைமை பயன்படுத்தும் போது ஏதாவது வழுக்களுடனான நிலைமை ஏற்படுமாயின் இந்த தரவு முறைமைக்கு தகவல்களை உள்ளடக்குதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்துடன், அந்த வழுக்களை சீரமைத்ததன் பின்னர் மீண்டும் தரவுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், விரைவாக முறைமையில் வழுக்களை திருத்தியமைத்து பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினர் 235 பேர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 22 பேர் ஆக மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 257 ஆகும். மொத்த உள்ளபடியான பதவியணியினர் 158 ஆக இருந்த போதிலும், அதில் 37 பேர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத மிகை எண்ணிக்கையாக இருந்தமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியினரில் உள்ளபடியான வெற்றிடங்களின் எண்ணிக்கை 135 ஆகும். | தற்போது அதிகார சபைக்காக 235 பதவிகளும், ஒப்பந்த அடிப்படையில் 12 மருந்து பகுப்பாய்வாளர் பதவிகளும் மற்றும் முகாமைத்துவ உதவியாளரில் 10 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உள்ளபடியான பதவியணியினர் 158 ஆக உள்ளது. | தேவையான மற்றும் தேவையற்ற பதவிகளை இனங்கண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 நவம்பர் 03 ஆம் திகதி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிணியினரில் உள்ள மருந்தியலாளர் பதவிகள் 70 இனை நீக்கி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிகள் 30 மற்றும் உதவி மருந்து மதிப்பீட்டாளர் பதவிகள் 40 ஆக புதிய 70 பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உதவி மருந்து மதிப்பீட்டாளரில் 28 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தமையினால் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் 30 பேர்களும், உதவி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்களில் 12 பேர்களினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் உள்ளீர்ப்பு செய்வதற்கோ அல்லது ஆட்சேர்த்தல் முறைமையோ இந்த அறிக்கை | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அங்கீகரித்த 70 மருந்தியலாளர் பதவிகள் நீக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2020 திசெம்பர் 21 ஆம் திகதி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிகள் 30 மற்றும் உதவி மருந்து உத்தியோகத்தர் பதவிகள் 40 என்பன அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை 2021 மார்ச் 31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அதிகார சபையில் இருக்கின்ற மருந்தியலாளர்கள் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் உதவி மருந்து உத்தியோகத்தர் பதவிகளுக்காக உள்ளீர்ப்பு செய்யும் செயற்பாடுகள் 2021 யூன் 14 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2021 யூன் 13 | முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையை உள்ளீர்ப்பு செய்வதற்கோ அல்லது ஆட்சேர்ப்பு திட்ட முறைமையை அமுல்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வெற்றிடமான பதவிகளுக்குரிய பணிப் பொறுப்புக்கள் சுகாதார அமைச்சில் நியமிக்கப்பட்ட தற்போது நீக்கப்பட்டுள்ள பதவிகளான மருந்தியலாளர் பதவிகளை செய்கின்ற 37 உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்காக உள்ளீர்ப்பு செய்யும் முறைமையின் அடிப்படையில் அந்த மருந்தியாலளர்களுக்கு மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கு உள்ளீர்ப்பு செய்யும் சந்தர்ப்பம் காணப்பட்ட போதும், அந்த செயற்பாடுகளின் தாமதத்தின் அடிப்படையில் அவர்களுக்கு நியாயமற்றவைகள் இடம் பெற்றமையும் அந்த நிலைமை அவர்களின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஆம் திகதி பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரித்து 2021 திசெம்பர் 15 ஆம் திகதி முதல் இது வரை 29 உதவி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அதில் மூன்று பேர் சேவையில் இருந்து கேட்டு விலகியதுடன், 26 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், அதிகார சபையின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மருந்தியலாளர்களை அதிகார சபைக்கு உள்ளீர்ப்பு செய்ய வேண்டியிருந்தமையால் 2021 திசெம்பர் 30 ஆம் திகதி அவர்கள் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் உதவி மருந்து மதிப்பீட்டு உத்தியோத்தர் பதவிகளுக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவரின் விருப்பம் / விருப்பமின்மை தொடர்பாக அதிகார சபையின் பதிலில் எதிர் பார்க்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அவர்களின் பதில் கிடைத்ததன் பின்னர் உள்ளீர்ப்பு செயற்பாடுகளை கொண்டு செல்வதற்கு முடியுமாக இருக்கும். | |
| (இ) | அதிகார சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படுகின்ற உயர் முகாமைத்துவ பதவிகள் 21 இல் 18 பதவிகள் அதாவது 18 பதவிகள் அதவது 71 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டமையால் அவசியமான மற்றும் அவசியமற்ற பதவிகளை இனங்கண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை திருத்திக் கொள்வதற்கு தவறியிருந்ததுடன், தேவையான பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமை அதிகார சபையின் ஒட்டுமொத்த செயலாற்றல் தொடர்பிலும் தாக்கமளிக்கக் கூடியதாக | அதிகார சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட 21 உயர் முகாமைத்துவ பதவிகள் காணப்பட்டதுடன், அந்த உயர் முகாமைத்துவ பதவிகளுக்கு இடையே பணிப்பாளர் (மனித வளம்) பதவிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட போதும், பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர் சேவையில் இருந்து நீக்கப்பட்டதுடன். சட்ட உத்தியோகத்தர் பதவிக்காகவும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த உத்தியோகத்தரும் சேவையில் இருந்து கேட்டு விலகியிருந்தார். | இந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது ரூபா 308,487 தொகை செலவில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து பணிப்பாளர் (மனித வளம்) மற்றும் உள்ளக கணக்காய்வளார் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | பணிப்பளார் (மனித வளம்) மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன். தகைமை உடைய விண்ணப்பதார்கள் இருக்காமையின் காரணமாக பணிப்பாளர் சபையினால் அந்த நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளை இரத்துச் செய்தவற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பனை மேற்கொள்வற்கு பிரதமர் அலுவலகத்தில் இருந்து அனுமதி கோரி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அனுமதி கிடைத்த பின்னர் அந்த பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றமையும் மற்றும் பணிப்பாளர் (மனித வளம்) பதவிக்காக மிகவும் தகைமை உடைய உத்தியோகத்தரை சேர்த்துக் கொள்வதற்கு இயலுமான வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தம் செய்யும் செயற்பாடுகள் முடிவடைந்ததன் பின்னர் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை செய்வவதற்கு முடியுமாக இருக்கும். | இந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மருந்துள் மற்றும் ஒசுசலைகள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளுக்காக மருந்து பரிசோதகர் பதவிகள் 20 அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதும், சுாகதார அமைச்சில் இருந்து அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் இருவர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதிகார சபையின் பிரதான பணியாக மருந்துகள் மற்றும் ஒசுசலைகளை | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்காக மருந்து பரிசோதகர் பதவிகள் 20 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்ததாக இனங்காணப்பட்டிருந்தமையினால் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் கீழ் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இருவர் | இந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குபடுத்தலுக்குரிய செயலாற்றல் தொடர்பில் இந்த பதவியணியினரின் பற்றாக்குறை நேரடியாக தாக்கமளிக்கக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தமையும், இது போதுமான அளவாக இருந்தமையை குறிப்பிட்டு இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்களை வழங்குமாறு கோரி சுகாதார அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், அதற்கு பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. | |
| (ஊ) | தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு கையேற்று 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும், அதற்கு தேவையான பதவியணியினர் இது வரை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்திற்கு உரிய பதவிகள் என்ன என்பதும் மற்றும் அவற்றை திருத்த வேண்டிய முறைகள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன், நிரந்தரமாக பதவிகளை தோற்றுவிக்கும் வரை ஒப்பந்த அடிப்படையில் 12 மருந்து பகுப்பாய்வாளர் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆட்சேர்த்தல்களை மேற்கொள்வதற்காக பிரதமர் அலுவலகத்தில் இருந்து அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அந்த ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியும். | தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்திற்காக தேவையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 24 நாட்கள் தாமதத்துடன். 2023 மார்ச் 24 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைவு ஆண்டறிக்கை | எதிர்வரும் ஆண்டின் போது இவ்வாறான தாமதங்கள் இன்றி சரியான காலஎல்லையில் இறுதி கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.2 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 23 ஆவது பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாத காலத்திற்குள் அமைச்சருக்கு அதிகார சபையினால் அந்த நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆண்டறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடன் உரிய ஆண்டிற்கான அதிகார சபையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் மற்றும் அடுத்து வரும் ஆண்டிற்காக முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையும் இணைக்கப்படல் வேண்டும். அந்த அறிக்கை கிடைத்த திகதி முதல் ஆறு மாத காலத்திற்குள் அமைச்சரால் அது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை தயாரித்து அமைச்சருக்கும் பாராளுமன்றத்திற்கும் இது வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை தற்போது அதிகார சபையினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை இந்த வாரத்தில் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை தற்போது தயாரிக்கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை தயாரித்து விரைவாக அமைச்சருக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 உபாயவழித் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உபாயவழி திட்டங்கள் தாயரித்து வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரி செயலாளருக்கும் மற்றும் பொது முயற்சிகள் | தற்போது இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், உபாய வழி திட்டத்திற்கு பதிலாக 2022 – 2026 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் உபாய வழி திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் தற்போதைய நிலைமைக்கு இடையே செயற்திறனான இடைவெளிகள் மற்றும் அபிவிருத்தி இடைவெளிகள் இனங்காணப்படாதிருந்ததுடன், அந்த இடைவெளிகளை தீர்ப்பதற்கான தேவையான உபாய வழிகளும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |

**4.4 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இன் நவம்பர் 16 ஆம் திகதி 01/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கான குறித்துரைத்த கால இலக்கு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு 2021 நவம்பர் 16 ஆம் திகதி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தி | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதிலும், தகைமையுள்ள விண்ணப்பதாரர் இருக்காமையின் காரணமாக | கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் அதற்குரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| என்பவற்றின் பிரகாரம் அதிகார சபைக்காக உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக நேரடியாக நிர்வாக சபைக்கு அறிக்கையிடுவதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையினால் அந்த நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், ஆட்சேர்ப்பதற்காக அனுமதி கோரி பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அனுமதி கிடைத்ததன் பின்னர் இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீடு மற்றும் எதிர்வு கூறப்பட்ட நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |